★ கல்வி ராஜாங்க அமைச்சர் சிபார்சுடன்

## மூலாதாரப் பாடசாலையற்ற கொத்தணி அதிபர் நியமனம்

யாழ் மாவட்டத்தில் மூலாதாரப் பாடசாலையற்ற கொத்தணி அதிபர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பகுதியில் உள்ள ஒரு கொத்தணியில் நீண்டகால மூதாளர்தர அதிபர் பதவிச்சேவையில் இருந்து கொத்தணி அதிபராக நியமிக்கப்பட்ட அதிபர் கொத்தணி அதிபர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டு, சாதாரண அதிபராக மட்டும் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார். — 04 ஆம் பக்கம் பார்க்க

★ பி. பி. ஸியின் கண்ணோட்டம்

## வடக்கில் 'தாக்கிவிட்டு மறையும்' புதிய பாணியில் ஸ்ரீலங்கா ராணுவம்!

விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளும் 'தாக்கிவிட்டு மறையும்' யுக்தியை வடக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தற்போது மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு பி. பி. ஸி. செய்தியாளர் தனது இலங்கையில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான கண்ணோட்டத்தில் தெரிவித்துள்ளார். வடபகுதியில் வவுனியா மற்றும் குடாநாட்டில் இத்தகைய தாக்கிவிட்டு மறையும் (Hit and Run) முறையை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த சில மாதங்களாக மேற்கொண்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார். அண்மையில் மன்னாரில் இத்தகைய தாக்குதல் முயற்சியில் ஈடுபட முனைந்த இராணுவத்தினர் மீதே புலிகள் நடாத்திய தாக்குதலில் 50 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இவ்வாரம் தாண்டிக்குள நடவடிக்கையும் இத்தகையதே என தெரிவிக்கப்படுகிறது. பலமான இராணுவங்களை தாக்கவே உலகில் கெரில்லா இயக்கங்கள் தாக்கிவிட்டு மறையும் முறையை கையாள்கின்றன. ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் தற்போது வடக்கில் பெரும் நகர்வை முன்னெடுக்க முடியாத நிலையில் புலிகளுக்கு எதிராக இப்புதிய முறையை கையாள ஆரம்பித்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 169 பிரமோதூத பங்குனி 02 (16-03-1991) சனி

### கற்கோவளத்தில் இரு சடலங்கள்

பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரையில் 12 ஆம் திகதி இரு சடலங்கள் கரை யொதுங்கின. இச் சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

குடத்தனை கடலில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் பிரங்கித் தாக்குதல்களின் போது வள்ளத்திலிருந்து காணாமல் போன நமுரளி —04 ஆம் பக்கம் பார்க்க

# 6 ஆம் ஆண்டு சமூகக்கல்வி நூல் தமிழ் மாணவருக்கு ஏற்றதல்ல

### சிலாவத்துறையில் குண்டு வீச்சு

நேற்று மன்னார் மாவட்டம் சிலாவத்துறையில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சை நடத்தின. காலை 6 மணி — 4 ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள, பௌத்த பேரினவாதப் பின்னணி கொண்டது

'ஆறாம் ஆண்டில் பயன்படுத்தப்படும் சமூகக்கல்வி நூல், சிங்கள இனத்தினதும் பௌத்த மதத்தினதும் புகழ்பாடும் மகாவம்சம் கூறும் கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டது. இது தமிழ்ப்பாடசாலைகளுக்கு உகந்தது அல்ல. இதைத் தமிழ் மாணவர்களுக்குக் கற்பிப்பது தமிழ் ஆசிரியர்களின் மனச்சாட்சிக்கு ஒவ்வாததாகும்.'

இந்நூலின் உள்ளடக்கம் மட்டுமன்றி படங்களும் கூட சிங்கள பௌத்த பண்பாட்டையே பிரதிபலிக்கின்றன.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய பின்னணியை பிரதிபலிக்க ஒன்றாவது இல்லை.

நூலின் பதிப்பாசிரியர்களும் ஒவ்வொரும் ஆலோசனைக்குழு உறுப்பினரும் சிங்கள பௌத்தர்களே.

ஆறு சிங்கள அரசு பற்றிக் கூறும் இந்நூலில் தமிழ் மன்னர்கள் பற்றியோ இராட்சியங்கள் குறித்தோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

துட்டகைமுனு எல்லாளனுடன் போராடிச் சென்ற பாதை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் உள்நோக்கம் தமிழர்களுக்கு எதிரான போருக்கு தயார் செய்வதே என்றே கருத வேண்டியுள்ளது. 44 ஆண்டுகள் ராஜரட்டையில் செங்கோல் செலுத்திய தமிழ் —04 ஆம் பக்கம் பார்க்க

### சிங்களக் கிராமம் தாக்கப்பட்டது

அம்பாறை மாவட்டத்திலும் அநுராதபுர மாவட்டத்திலும் இருசிங்கள கிராமங்கள் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று சிங்களவர்கள் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## தமிழக ஆட்சிக்கலைப்பு ஆச்சரியம் தருகிறது -ராஜீவ்

தமிழ்நாட்டில் தி. மு. க. அரசு ஆளுநர் சிபார்சு இன்றி கலைக்கப்பட்டது தமக்கு ஆச்சரியத்தை அளித்ததாக ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நேற்று கருத்து வெளியிட்ட மு. கருணாநிதி இது காங்கிரஸ்காரரின் கண் துடைப்பே என்றார்.

"தமிழக அரசை கவிழ்த்தது அவருக்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தி —04 ஆம் பக்கம் பார்க்க

## தாண்டிக்குளத்தில் புலிகள்-ராணுவம் ஷெல் தாக்கு

தாண்டிக்குளம் புதுவீதிச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் மீது புலிகள் அருள் 89 செஷல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்ற இத்தாக் —04 ஆம் பக்கம் பார்க்க

### மாவிட்டபுரத்தில் அருள் 89 தாக்கு

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் மாவிட்டபுரம் இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது அவர்கள் மீது புலிகள் அருள் 89 தாக்குதலை மேற்கொண்டனர்

## அமைச்சர் ரஞ்சனின் மகன் ரோகானும் எம். பியானார்

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் ...

மிக்கப்படலாம் எனப்பது குறிப்பிடத்தக்கது.

கலந்துகொள்ளும் வைபவங்களிலும் அதிகமாக கலந்து

## புலி பாய்ந்தகல் கிராமம் இராணுவத்தால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாவட்டம் கப்பட்டது.

# அமைச்சர் ரஞ்சனின் மகன் ரோகானும் எம். பியானார்

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் மகன் ரோகான் விஜேரட்ன (33) பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுச்செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையில் கூடிய ஆளும் ஐ. தே. கவின் செயற் குழு கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இறந்தாலோ அல்லது ராஜினாமா செய்தாலோ அவரது இடத்துக்கு புதியவர் ஒருவர் ஆளும் கட்சியின் ஒப்புதலுடன் நியமிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

ரோகான் அண்மைக்காலமாக அமைச்சர் ரஞ்சன் கலந்துகொள்ளும் வைபவங்களிலும் அதிகமாக கலந்து கொண்டு வந்தமையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

### அரச அதிபர் அனுமதிக் கடிதத்துடன்

## எரிபொருள், உணவுப்பொருள் அனுராதபுரத்திலிருந்து பெறலாம்

யாழ் குடாநாட்டிலுள்ள பல நோ. கூ. சங்கங்கள், அங்கீகாரம் பெற்ற வர்த்தகர்கள் அனுராதபுரத்தில் இருந்து எரிபொருள், உணவுப் பொருள்கள், விவசாயிகளுக்கான பசளை வகைகளைப் பெற்றுவர அரசாங்க அதிபரினால் அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படும்.

யாழ் அரச அதிபர் அன்ரன் அல்பிறட் கொழும்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தி அனுராதபுர அரச களஞ்சியங்களில் இருந்தும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகள் குடும்பங்களுக்கு அதிகளவுபால்மாகிடைக்கும்

யாழ் மாவட்டத்திலுள்ள அகதிகள் குடும்பங்களுக்கு அதிக அளவில் பால்மா வகைகளை வழங்க செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்குள் வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளவர்களுக்கும், வெளிமாவட்டங்களில் இருந்து இங்குவந்து அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ளவர்களுக்கும் பால்மா வழங்கப் படும்.

இதன்படி ஐந்து அங்கத்தவர்களும் அதற்கு மேற்பட்ட தொகையையுடைய குடும்பம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வசதி குறைந்த மாணவருக்கு இலவச வகுப்புக்கள்

பருத்தித்துறை விநாயகர் தருமநிதிய ஆதரவு மன்றம் மேலைப்புலோலி நாவலர் சனசமூக நிலையம், மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வசதிகுறைந்த மாணவர்களுக்கான இலவச வகுப்புக்களை நடாத்திவருகின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

சந்தியில் நின்ற இராணுவத்தினர் மீது புலிகள் அருள் 89 செலுத் தாக்குதலை மேற் நேற்றுக்காலை 9 மணியளவில் நடைபெற்ற இத்தாக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## புலி பாய்ந்தகல் கிராமம் இராணுவத்தால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு மாவட்டம் புலிபாய்ந்தகல் கிராமம் நேற்றுமுன்தினம் மாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது.

கிரான், செங்கலடி, சந்திர வெளி முகாம் ராணுவத்தி

—04 ஆம் பக்கம் பார்க்க

## மாவிட்டபுரத்தில் அருள் 89 தாக்கு

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் மாவிட்டபுரம் இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது அவர்கள் மீது புலிகள் அருள் 89 தாக்குதலை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் முகாமுக்கு பின் வாங்கினர்.

# சிறு கைத்தொழிலாளருக்கு கடன் அடிப்படையில் பண உதவி

சிறு கைத்தொழில் மற்றும் குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவர்களை அத் தொழில்களைச் செய்வதற்கு கடன் அடிப்படையில் பணம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண கைத்தொழில் சக்திவள அமைச்சு பணிப்பாளர் இதற்கான சுற்று நிருபம் ஒன்றை யாழ் செயலக கைத் தொழில் பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கைதடி, நாவற்குழி, தச்சுத் தொழிற்சாலை, தும்புத்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இரு வாரங்களுக்கு மட்டும் சகலருக்கும் இலவச நிவாரணம்

குடாநாட்டிலுள்ள சகலருக்குமான இலவச உலர் உணவு மேலும் இருவாரங்களுக்கு வழங்கப்படும்.

யாழ் அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் கொழும்பில் ஜனாதிபதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து இதனை வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஆறாவதுவார விநியோகம் முடிவடைந்த பின்னர் இந்த இரண்டு வார விசேட இலவச விநியோகத்தை செய்ய செயலகம் நடவடிக்கை எடுத்து

—04 ஆம் பக்கம் பார்க்க

### மாவை சேனாதிராஜா

## இராணுவ தாக்குதலை நிறுத்த இந்தியா நெருக்குதல் வேண்டும்

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதில் நடைபெறும் இராணுவ தாக்குதல்களையும், விமானக் குண்டு வீச்சையும் நிறுத்த இந்திய அரசு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## அஷ்ரப்பின் அரசியற் குத்துக்கரணங்கள்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அரசியலில் முன்னுக்கு வருவதற்குத் துடியாய்த் துடிக்கிறார். படாதபாடு படுகிறார் முஸ்லிம் மக்களின் முன்னேற்றம் அல்ல அவரது குறிக்கோள். தனது அரசியல் முன்னேற்றமே அவரது குறிக்கோள்.

இந்தக் குறிக்கோளை அடைவதற்குப் பலவிதமான குத்துக்கரணங்களைப் போடுகின்றார் என்று கொழும்பு பத்திரிகையொன்று விமர்சித்துள்ளது.

சென்ற பொதுத் தேர்தலுக்கும், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் போட்டியிட்ட ஜனநாயக சோஷலிச முன்னணியுடன் இணைந்து செயற்பட்டார். இறுதி நேரத்தில் யூ என் பி யுடன் இணைந்தார்.

இதே மாதிரித்தான் ஜனாதிபதி பிரேமதாசாவுக்காக உயிரையே விடுவேன் என ரஞ்சன் விஜேரட்னவுக்கும் கூறி யூ. என். பி பக்கம் போனார் முன்பு! இப்போது சடுதியாக சுதந்திரக் கட்சிப் பக்கம் தாவி சுதந்திரக் கட்சிக்காக உயிரையே விடுவேன் என சிறிமாவோ பண்டார நாயக்காவுக்குச் சொல்லியிருக்கிறார்.

இவரிடம் எத்தனை உயிர்கள் இருக்கின்றனவோ தெரியாது; ஆனால் குத்துக் கரணம் அடிக்கும் சக்தி அபரிமிதமாகவே இருக்கிறது! எனவும் இப்பத்திரிகை எழுதியுள்ளது.

# 8 படகுகளில் நயினைக்கு உணவுப்பொருள்; முஸ்லிம்களுக்கு கடற்படை வழங்கியது!

நயினாதீவு கடற்படையினர் மன்னாரிலிருந்து எட்டுப் படகுகளில் உணவுப் பொருள்களை எடுத்து வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உணவுப் பொருள்கள் நயினாதீவில் கடற்படையினரின் பாதுகாப்பில் தங்க வைக்கப்பட்டுள்ள முஸ்லிம்களுக்கு கடற்படையினரால் வழங்கப்பட்டதாக எமது நிருபர் அறிவிக்கின்றார்.

நயினாதீவில் தங்க வைக்கப்பட்டுள்ள இந்த முஸ்லிம்களுக்கு கடற்படையினர் ஆயுதங்களை வழங்கியுள்ளதாகவும் மேலும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (20)

## ஒரே நேரம், ஒரே வகுப்பு ஆசிரியர்களோ இருவர்

ஒரே நேரத்தில் 2 ஆசிரியர்கள் ஒரு வகுப்பறையில் கடமையாற்றும் நிலை பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வேறு ஒரு கோட்டத்தில் இயங்கும் ஒரு பாடசாலையில் காணப்படுகின்றது.

6 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரை இருந்த இப்பாடசாலையின் 12 ஆம், 13 ஆம் ஆண்டுகள் வேறு ஒரு பாடசாலையோடு சேர்க்கப்பட்டதால் தற்சமயம் 10 வகுப்புப் பிரிவுகளே உள்ளன. சுமார் 250 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையில் 40 க்கும் அதிகமான ஆசிரியர்கள் பணிபுரிவதாலேயே இந்நிலை காணப்படுகின்றது. (ப-10)

## நெடியகாட்டில் ஹெலி தாக்குதல்

நேற்று முன்தினம் பிற்பகல் வல்வை நெடிய காட்டுப் பகுதியில் 'ஹெலி' ஒன்று உக்கிரமான 'கலிபர்' தாக்குதலை மேற்கொண்டது.

இப் பகுதி கடலில் படகு ஒன்றில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (ப-10)

## சென்ட்றலின் பயிற்சிப் பாசறை

யாழ் மாவட்டத்தில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டு 75ம் ஆண்டை யொட்டி யாழ் — மாவட்ட திரிசாரணர் குழுவினரால் நேற்று பயிற்சிப் பாசறை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது

திரிசாரணர்க்கும், சிரேஷ்ட சாரணர்க்கும் பயிற்சியளிக்கும் முகமாக யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும் இப் பயிற்சிப் பாசறை 17ஆம் திகதி வரை நடைபெறும்.

இறுதி நாள் பொது மக்களுக்கான பாசறைத்தீ நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது

## மனனப் போட்டியில் வெற்றிபெற்றோர்

சரசாலை இந்து இளைஞர் மன்றம் நடாத்திய திருப்பள்ளியெழுச்சி மனனப்போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சு. சுதர்சினி முதலிடத்தையும் இதே கல்லூரியைச் சேர்ந்த க. சரவணபவானந்தன் மூன்றாமிடத்தையும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வ. கமினா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

மத்தியபிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சி. நிரஞ்சனா முதலிடத்தையும், சி. சிவசீலன், சி. மேகனா ஆகியோர் மூன்றாமிடத்தையும் சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தைச் சேர்ந்த ம சிவரஞ்சனி இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவில் சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தைச் சேர்ந்த ச. சர்மிளா, ச. சுதர்தன் சு குகதாசன் ஆகியோர் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

## அருட் சகோதரிக்கு இடமாற்றம்

கரவெட்டி திருஇருதயக் கல்லூரி ஆசிரியையாக ஆறு வருடங்கள் பணியாற்றிய

## தொழில்நுட்ப அதிபர் ஓய்வு பெறுகிறார்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் பத்து ஆண்டுகள் உப அதிபராகவும், ஒன்பது ஆண்டுகள் அதிபராகவும் பணி ஆற்றிய திரு. சிதம்பரப்பிள்ளை இராஜேந்திரா ஓய்வு பெற்றுள்ளார்.

மலேசியாவில் பிறந்து அங்கு ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் இந்தியாவில் பூனா பல்கலைக் கழகத்தில் விவசாய விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றார்.

தனது பட்டமேற்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முடித்த இவர் 1977, 1981 ஆகிய இரு ஆண்டுகள் கொழும்புத்திட்டப் புலமைப் பரிசில் பெற்று சிங்கப்பூருக்கும், 1987 இல் கல்கத்தாவிற்கும், தொழிற்கல்வி பற்றிக் கற்பதற்குச் சென்று வந்தவராவார். 1968 தொடக்கம், 1971 வரை சேர் பொன்னம்பலம் கனிஷ்ட பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளராகவும் இவர் கடமை புரிந்தார்.

1972 பெப்ரவரி கொக்குவில் பல்தொழில் நுட்பக் கல்லூரி உப அதிபரான இவர் 1982 இல் இப் பல்தொழில்நுட்பக் கல்லூரி மூலசம் தர தொழில் நுட்பக் கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்ட பின்னரும் கல்லூரியின் அதிபராகிப் பணியாற்றி வந்தார்.

## காங்கேசன் ஊழியருக்கு....

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் சகல மேசன், தச்சுத் தொழிலாளிகளையும் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள தற்காலிக காரியாலயத்தில் இன்று காலை 10 மணிக்கு முகாமையாளரைச் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

சிவசுப்பிரமணியர்

## 60 கோடிரூபா செலவில் கொழும்பு வைத்தியசாலை அபிவிருத்தி

வெளிநாடுகள் மூலம் கிடைக்கும் நிதியுதவிகளைக் கொண்டு ஸ்ரீலங்கா அரசு தென்னிலங்கைப் பகுதி வைத்திய சாலைகளின் அபிவிருத்தியில் அதிக கரிசனை காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 60 கோடி ரூபா செலவில் மதிப்பிடப் பட்டுள்ள பாரிய அபிவிருத்தித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இங்கு புதிய அவசர சிகிச்சை வார்ட்டையும் அங்கவிகார விபத்துச் சிகிச்சை பிரிவுக் கட்டிடத் தொகுதியையும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ நேற்று மாலை திறந்து வைத்தார்.

இதில் நவீன உபகரணங்கள் கொண்ட ஏழு சத்திர சிகிச்சைநிலையங்களும், இரத்தவங்கியும், தீவிரசிகிச்சைப் பிரிவும் அடங்கியுள்ளன.

கட்டிட அடித்தளத்தில் விபத்து வார்ட் அமைக்கப் பட்டுள்ளது.

பாரிய அபிவிருத்தித்திட்டம் ஆறுபகுதிகளாக இருக்கும் என்றும் இதன் முதற்கட்டமே இது என்றும் முதற்கட்ட அபிவிருத்திக்காக எட்டுமாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அறுபது கோடி ரூபா கொண்ட இந்த அபிவிருத்திக்கான நிதியில் பின்லாந்து 85 சதவீதத்தை ஏற்றுள்ளது. மிகுதியை அரசு ஏற்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் ஆஸ்பத்திரியில் ஒரேயொரு எக்ஸ்ரே; அதுவும் பழுதுறும் ஆபத்து

யாழ் போதனா வைத்திய சாலையில் தற்போது உள்ள ஒரே ஒரு எக்ஸ்ரே கதிர்வீச்சு இயந்திரமும் பழுதடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடா நாட்டில் இங்கு மாத்திரமே இந்த இயந்திரவசதி உள்ளமையால் பல பகுதியில் இருந்தும் வரும் நோயாளிகளுக்கு இந்த இயந்திரமே பயன்படுத்தப்படுகிறது. கூடிய பாவனையாலும், உரிய வலுவான மின்சாரம் இல்லாமையாலும் இது செயல் இழக்கப் போகும் நிலை உருவாகியுள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

ஆதலால் இதனை அடிக்கடி குளிரூட்டியே பாவிக்க வேண்டியுள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (74)


## க. பொ. த. சாதாரணதரம் PRACTICE EXAM பயிற்சிப் பரீட்சை

1990 Dec இல் தடைப்பட்ட க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெற உள்ளது.

- யாழ் குடா நாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ் மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.
- யாழ் மாநகரசபை எல்லை தவிர்ந்த குடாநாட்டின் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள், கீழ்க்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொண்டு அதனை ஒழுங்கு


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:

16

07

மூகவரியுடன் தொடர்பு கொண்டு அதனை ஒழுங்கு செய்யலாம்

- கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப் பரீட்சை நடைபெறும்.
- 20-03-91 இற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட மூகவரியில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50 செலுத்துதல் வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.
- தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும். ஐந்து பாடத்துக்குமுரிய மொத்தப் புள்ளிகளில் அதி கூடுதலான கூட்டுத் தொகையை பெறுபவருக்கு தங்கப்பதக்கமும், ஒவ்வொரு பாடங்களிலும் கூடுதலான புள்ளியைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசுகளும் வழங்கப்படும்.

# EXAMINATION UNIT UNIVERSAL

KANTHARMADAM. JAFFNA.

★★ பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம் தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20-03-1991 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

03076

வருடங்கள் பணியாற்றிய துடன் சுரவைப்பங்கின் பாடகர் குழுவின் பொறுப்பாளராகவும் செயலாற்றி வந்த அருட் சகோதரி மேரி புனிதம் ஹென்றிக்கா மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

இதனையொட்டிப் பாடகர் குழு பாராட்டு விழாவொன்றை நடாத்தியது.

கரவெட்டி பங்குத்தந்தை அருட்திரு சி.திவ்வியசெல்வராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

## சிறு விளம்பரம்

### விற்பனை

பிரசோற்பத்தி வருஷத்திற்கான பஞ்சாங்கம் வெளிவந்து விற்பனையாகின்றது. இரகுநாத ஐயரின் வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித ஐயரின் திருக்கணித பஞ்சாங்கம். வியாபாரிகள் பெற்றுக் கொள்ளலாம். விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.

03070

(33)

## சிவசுப்பிரமணியர் ஆலய உற்சவம்

பண்ணாகம் விசவர்த்தனை ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும். 28 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

(34)

## செஞ்சிலுவைச் சங்க செயற்குழுக் கூட்டம்

செஞ்சிலுவைச் சங்கம் -யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். செயற்குழு உறுப்பினர் தெரிவும், சங்க அறிக்கை சமர்ப்பித்தலும் தீர்மானங்களும் மற்றும் விடயங்களும் நிகழ்ச்சி நிரலில் அடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



07

1921

மறைவு:

14

02

1991

## கதிரேசு வடிவேலு (ஆசாரி)

அன்பின் திருவுருவாய் வாய்மையின் சிகரமாய் விளங்கி எம்மை வழிநடத்திய அன்புத் தெய்வமே தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். 16-03-91 இன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்பாக அழைக்கிறோம்,

காளிகோவிலடி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

அன்பு மனைவி நல்லம்மாள், பெறா மகன் மாசிலாமணி, மருமகள் சறோ, பேரப்பிள்ளைகள்.

03079

# அனுராதபுரம் ராணுவ கேந்திர நிலையமாகிறது!

# அதிக துருப்புக்கள் அங்குகுவிக்கப்படுகின்றன!!

அனுராதபுரத்திற்கு இராணுவ அணிகள் அடிக்கடி அனுப்பப்பட்டுவருகின்றன. புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் இராணுவப் பயிற்சியினை முடித்துக்கொண்டு வடக்கே அனுப்பப்படுவது வழக்கம். இந்த வகையிலே இந்த இராணுவ அணி அனுராதபுரம் வந்து சேர்ந்திருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

வடபகுதிக்கான இராணுவ நடவடிக்கையின் மத்திய நிலையமாக அனுராதபுரம் மாறுகின்றது. வடக்கே மேற்கொள்ளப்படும் எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் அனுராதபுரத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது எனவும் இப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

இப்போது ரயில் மூலம் இந்த இராணுவ அணியினர் அனுராதபுரத்திற்கு வந்து சேருகிறார்கள்(11)

## பாடசாலை பதில் அதிபர்களுக்கு வடக்கில் நிரந்தர நியமனம்

பாடசாலைகளில் அதிபர் கடமை புரிந்த ஆசிரியர்களை நிரந்தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் வடபகுதிப்பாடசாலைப் பதில் அதிபர்களை நிரந்தரமாக்கிய கல்விச் சேவை ஆணைக்குழுவின் கடிதங்கள் சம்பந்தப்பட்ட அதிபர்களுக்கு கிடைத்துள்ளன.

31. 12. 1988 ஆம் திகதி மூன்று வருடகால பதில் அதிபர் சேவையை முடித்துள்ள மேற்படி அதிபர்கள் பாடசாலைத்தரங்களுக்கேற்ப நிரந்தர அதிபர்களாகப்பதவி உயர்த்தி வைக்கப்பட்டுள்ளனர். 01. 06. 1989 ஆம் திகதி தொடக்கம் செயற்படும்படியாக இவர்களது நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைத்தரம் 1 ஏ பி. சி. தரத்தில் கடமைபுரிந்த அதிபர்களை முதலாம் தர அதிபர்களாகவும் ஆண்டு 1 இல் இருந்து 11 வரையான தரம் 2ஐ உடையபாடசாலைகளில் கடமைபுரிந்த அதிபர்களை இரண்டாம்தர அதிபர்களாகவும் ஏனையபாடசாலை அதிபர்களை மூன்றாம்தர அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (32

## சகல கூட்டுறவு ஊழியருக்கும் காப்புறுதி; மாதம் 100 ரூபாகட்டுப்பணம் அறவிடப்படும்

கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த சகல ஊழியர்களும் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் முதல் இவர்கள் காப்புறுதிக்கட்டுப் பணத்தை மாதா மாதம் கட்டல் வேண்டும்.

கூட்டுறவு துறை ஊழியர்களிடம் மாதா மாதம் 100ரூபா காப்புறுதிப் பணமாக அறவிடப்படும். இதில் 50ரூபாவை மட்டுமே ஊழியர் செலுத்துதல் வேண்டும். மிகுதிப் பணத்தை ஊழியருக்காக சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கம் காப்புறுதிச்சபைக்குச் செலுத்தும்.

## 'டிமிக்கி' விடும் பயிற்சி ஆசிரியர்; தண்டனை கிடைக்குமென்கிறார் அதிகாரி

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்ட பலர் பின்னர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதி பெற்றுச் சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆசிரியர்களின் விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார். (ப-5)

## கலை அரங்கு புனருத்தாரணம்

தென்மராட்சியில் கடந்த பல வருடங்களாக இயங்காத நிலையில் இருந்த தென்மராட்சி கலை அரங்கு மகா சிவராத்திரியன்று தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் முயற்சியினால் மீண்டும் புனருத்தாரணம்செய்யப்பட்டு இயங்க ஆரம்பித்துள்ளது. (ப-4

## ருகுணுவில் தமிழில் போதனை இல்லை; மாணவர்கள் இடம்மாற முயற்சி

ருகுணு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியாமல் தமிழ் மாணவர்கள் பலர் மேற்படிப்பை இடை நிறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி மூலம் பட்டப்படிப்பு நடைபெறாததால் சில மாணவர்கள் பட்டப் படிப்பை நிறுத்தியுள்ளனர். வேறு சிலர் மாற்றுப் பல்கலைக் கழகங்களுக்கு இடம் மாற முயற்சித்து வருகின்றனர். (38)

## இலங்கையின் ஜனத்தொகையில் ஒரு வீதத்தினர் மனநோயாளிகள்

இலங்கையின் சனத்தொகையில் ஒரு சதவீதத்தினர் மன நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பது இலங்கை மன நலத்துக்கான தேசிய சபை நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

மதுவுக்கு அடிமையாகி உள்ளவர்களிடம் மனநோய் கூடுதலாகக் காணப்படுகின்றது.

தற்பொழுது இலங்கையில் 160000 பேர் மன நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனைகளும், சிகிச்சையும் சமூகசேவைத்திணைக்களத்தின் ஆதரவுடன் மன நலத்துக்கான தேசியசபை மேற்கொண்டுள்ளது. இதற்காகக் கொழும்பில் பல இடங்களில் சிகிச்சை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

## சீனர்கள் மீது தீவிர கண்காணிப்பு; சிலர் தப்பிவிட்டதாகவும் தகவல்

கொழும்பில் சீனர்களின் நடவடிக்கைகள் குறித்து விழிப்பாகக் கண்காணிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

சில சட்டவிரோத நடவடிக்கைகளில் சீனர்கள் ஈடுபட்டு வருகின்றமை பற்றிய தகவல்கள் கிடைத்து வருவதாகவும் இதனாலேயே இந்த 'உஷார்' உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்

பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தச் சீனர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆட்பதிவுதிணைக்களவேலைகள் மாவட்ட மட்டத்தில் பரவலாகும்

கொழும்பிலேயே இயங்கி வரும் ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணி வருங்காலங்களில் கச்சேரிகள் மட்டத்தில் பரவலாக்கப்படவுள்ளது.

## சகல ச.ச. நிலைய தேர்தல்களையும்

இவ்வாண்டு தமிழிசைச்சங்க விருதுபெற்ற தவில் வித்துவான் 'வலையப்பட்டி' பேட்டியொன்றில் தெரிவித்த கருத்துக்களின் சில மூலக்கூறுகளைத் தருகிறோம்.

## தமிழகத்தில் தமிழிசை வளரவில்லை! யாழ்ப்பாணத்தில் தமிழிசை வளருகிறது!! அங்கேயே தூய தமிழைக் கேட்க முடிகிறது!!!

- வலையப்பட்டி சுப்பிரமணியம்

### ஈழமும் தவிலும்

தவில் ஒரு தனித்துவமான வாத்தியம். இதனை இராஜ வாத்தியமென்றும் கூறுவர். சரியான முறையில் வாசித்தால் ஏனைய வாத்திய ஒலிகள் எல்லாவற்றையுமே விழுங்கி விடக் கூடிய பேரொலியிக்க ஆற்றல் வாய்ந்தது; இராட்சத வாத்தியமும்தான். தனது வாசிப்புத் திறனால் தமிழகத்திற்கு அப்பாலும் ஈழத்திற்குப் பெருமை தேடித்தந்தவர் தவில் சக்கரவர்த்தி அளவையூர் தெட்சணாமூர்த்தி. அவர் அமரர். இன்று தமிழகத்தில் விதந்துபேசப்படுபவர் வலையப்பட்டி சுப்பிரமணியம்.

### தமிழிசைச் சங்க விருது

வலையப்பட்டிக்கு இவ்வாண்டு தமிழிசைச் சங்கத்தின் 'இசைப்பேரறிஞர்' விருது கிடைத்திருக்கிறது. தவில்வித்துவான் ஒருவருக்கு இந்த விருது வழங்கப்படுவதும், ஐம்பது வயதிற்கு உட்பட்ட ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுவதும் இதுவே முதல் தடவை!

### வலையப்பட்டி வாசிப்பு

சேலம் செவ்வாய்ப்பேட்டை மாரியம்மன் கோயிலில் சித்திரை பரணி விழாவுக்குக் கடந்த இருபத்தேழு வருடங்களாகத் தவில் வாசித்துக் கொண்டிருப்பவர் இவர். இரவு பத்து மணிக்குக் கச்சேரியை ஆரம்பித்தால் அடுத்த நாள் காலை பத்து மணிக்குத்தான் முடியும். அதில் இரண்டே முக்கால் மணித்தியாலம் வலையப்பட்டியின் தனி ஆவர்த்தனம். இரண்டு மூன்று முறை, விரலில் போட்டிருக்கும் கூடு இரத்தத்தில் தோய்ந்து போகும் வரைக்கும் தவில் வாசித்திருக்கிறார்.

### தவிலும் தமிழும்

தவில் இசைக்குத் தமிழ் இசைச்சங்கம் விருது கொடுத்ததேன்? தவில் எப்படித் தமிழிசையை வளர்க்கிறது என்று அவரிடம் கேட்கப்பட்டபோது கிட்டத்தட்ட எல்லா வாத்தியங்களும் எந்த மொழியில் பாட்டு அமைகின்றதோ அதற்கேற்றாற்போல மாறிக்கொள்ளும். தவிலைப் பொறுத்தவரை அதற்கு ஆதாரமாக விளங்குபவை தமிழ்ச் சொற்கட்டுக்கள் தான். தா—தீ—தொம்—நம் என்ற ஒலிகள்தான்.

"காரைக்குடியில் வாசித்தாலும் சரி, கலிபோர்னியாவில் வாசித்தாலும் சரி தவிலில் வருகிற சத்தம் தமிழ்ச் சத்தம் தான். தவில் தமிழ்நாட்டின் சொத்து"! என்ற அவர் தமிழிசை இன்றுவரை பிரபலமாகாததற்குரிய காரணத்தையும் சொன்னார்.

### தமிழிசையின் நிலை

தயிர்ச்சோறுக்கு ஊறுகாய் தொட்டுச் சாப்பாடுகிறது மாதிரித்தான் இன்று நம் கலைஞர்கள் தமிழ் இசையை அவர்கள் கச்சேரிகளில் பாடுகிறார்கள். தமிழ்ப் பாட்டுகள் இன்று துக்கடா/சில்லறை அயிற்றமாத்தான் இருக்கிறது. தமிழிசைச் சங்கக் கச்சேரிகளிலேயே இந்த நிலைதான்.

பாட்டுக் கேட்கிறவர்களுக்கு முதலில் தமிழ்ப்பற்றுவேணும் தமிழ்ப்பற்று இல்லாமல் தமிழிசை வளர்ந்திடாது. இங்கு பேசிலே பாதிக்குமேல் ஆங்கிலம் தானே கலந்து பேசுகிறோம்.

### யாழ்ப்பாணப் பேச்சு

வருகின்றமை பற்றிய தகவல்கள் கிடைத்து வருவதாகவும் இதனாலேயே இந்த 'உஷார்' உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க கொழும்பிலிருந்து சட்ட விரோதமாகச் சில சீனர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல உதவியதாக கூறப்படும் இலரைப்

## சகல ச.ச. நிலைய தேர்தல்களையும் தவறாது நடத்துமாறு பணிப்பு

சன சமூக நிலையங்களுக்கிடையில் உப-அலுவலக சமாஜம் பிரதேசசபை சமாஜம் ஆகியவற்றிற்கான புதிய நிர்வாகத் தேர்தல்களை சகல பிரதேச சபை மட்டங்களிலும் நடாத்துமாறு உள்ளூராட்சி ஆணையாளர் பணித்துள்ளார்.

இவ்வருட இறுதியில் சன சமூக நிலையங்களுக்கிடையில் கண்காட்சியொன்றினை நடாத்தவும் யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் முயற்சி எடுத்து வருகின்றார். (ப-1)

களத்தின் பணி வருங்காலங்களில் கச்சேரிகள் மட்டத்தில் பரவலாக்கப்படவுள்ளது.

இப்பரவலாக்கல் அடிப்படையில் ஓய்வூதிய அலுவல்கள், தேசிய அடையாள அட்டை வழங்குதல் போன்றவை மாவட்ட மட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

இதற்கான முடிவுகளைத் பொது நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டு விவகார அமைச்சர் எடுக்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## 'கலைஞரின் ஆட்சியில் தொலைநோக்கு இருக்கவில்லை'

தமிழகத்தில் தி.மு.க ஆட்சி கலைக்கப்பட்டது குறித்து டாக்டர் எஸ். உதயமூர்த்தி தெரிவிக்கிறார் இப்படி:-

தி மு க ஆட்சியில் ஒரு தொலைநோக்கு இருக்கவில்லை. அவர்கள் விருப்பப்படி தன்னிச்சையாகச் செயல்பட்டார்கள். தமிழீழப் பிரச்சினை, நதி இணைப்புத் திட்டம் இவற்றில் அந்தத் தொலை நோக்கின்மைதான் பிரதிபலித்தது. மதுவிலக்குக் கொள்கையை மீறினார்கள் மக்கள் தனக்களித்த ஆட்சியைப் பயன்படுத்தத் தவறிவிட்டார். அடுத்த ஆட்சிமாற்றம் தேவையான ஒன்றுதான். ஆனால் மத்திய அரசு அதைச் செய்த முறைதான் தவறானது. மத்திய அரசு வழக்குத் தொடுத்திருக்க வேண்டும். அல்லது விசாரணைக் கமிஷன் வைத்திருக்க வேண்டும். இவற்றை ஏன் செய்யவில்லை? காங்கிரஸ், அ.தி.மு கூட்டணிதான் வெற்றிபெறும் என நம்புகிறேன்.

## பயிலுநர் ஆசிரியரைப் பயிற்றுவிக்க 30 போதனாசிரியர்கள் நியமனம்

நாட்டிலுள்ள 25,000 பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை நடாத்துவதற்கென போதனாசிரியர்களைக் கல்வி அமைச்சு நியமிக்கவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்தகைய போதனாசிரியர்களாக 30 பேரை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் தெரிவு செய்யவுள்ளது.

இதற்கென கல்வி டிப்புளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்களிடமிருந்தும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (30)

## சண்டிலிப்பாயில் சமாஜக் கூட்டம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் பொதுச் சபைக் கூட்டம் இன்று சனிக்கிழமை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 13

### யாழ்ப்பாணப் பேச்சு

யாழ்ப்பாணத் தமிழர்களை எடுத்துப் பாருங்கள். அவர்கள் பேச்சிலேயே ஒரு ராகம் இருக்கும். இசைத் தமிழில்தான் அவர்கள் பேசுவார்கள். அவர்களுக்கு மொழிமேலே அவ்வளவு ஆசை. தூய்மையான தமிழை அங்கேதான் கேட்க முடியுது. அங்கே தமிழிசை வளருது.

### என் விருப்பம்

எனக்குத் தவில் வாசிக்கப் பிடித்த இடங்களுள் முக்கியமானது யாழ்ப்பாணம். விளம்பரங்களிலும், அறிவித்தல்களிலும், அவர்கள் 'வலையப்பட்டி சுப்பிரமணியம் குழுவினர்" என்று தவிலுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் போடுவார்கள்" என்றார்.

### மொழியும் இசையும்

நாம் பேசும்போது நமக்கு இசை தேவைப்படுவதில்லை ஆனால் பல சமயம் இசைக்கு வார்த்தை வேண்டும். வெறும் இராகத்தையே எவ்வளவுதான் இசைக்கக் கொண்டிருக்க முடியும். இராகத்தோடு ஒரு கவிதையைப் பாடலாய்ச் சேர்த்துப் பாடும்போதுதான் இசையின் சுகமே முழுமையாகிறது. மொழிக்கு இசை தேவை இல்லை. ஆனால் இசைக்கு அதன் வளர்ச்சிக்கு மொழிதேவை!

### மனித மகிமை

இசைக்கு மனித வாசனை தேவை. பத்துமாடிக் கட்டிடம் அதிசயம் அல்ல. கோபுரங்கள் தான் அதிசயம். மனிதன் செய்வதை இயந்திரம் செய்யும்போது (கலைத்துறையில்) அங்கே Humantouch இல்லை. பாடகர்கள் சிலர் தங்கள் கற்பனைக்கேற்றபடி பாட்டுக்களை மாற்றி "சங்கதி செய்வார்கள். அப்போது கொம்யூற்றர் திணறும்" என்று விளக்கியுள்ள அவர் இறுதியில் "கற்பனை இல்லை என்றால் அழகில்லை சங்கதி இல்லாமல் சங்கீதமே இல்லை" என்றார்.

# மலேரியா நோய் வடக்கில் பரவுகிறது தடுப்பு வேலைகள் செய்யமுடியாதநிலை

வடபகுதியில் மலேரியா நோய் கடுமையாகப் பரவி வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவில் நாடியதுக்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனையின் பின்னர் மலேரியா நோய்க்கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அகதிகளாக முகாம்களில் உள்ளவர்களுக்கே கூடுதலாக மலேரியா நோய் பரவி வருகிறது.

இதற்கான மருந்துகள் கொழும்பில் இருந்து குறைவாக அனுப்பப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் மலேரியா தடுப்புவேலைக்கு அலுவலகம் இருந்தும் செயற்படமுடியாத நிலையில் உள்ளது

ஏனைய ஆஸ்பத்திரிகளில் காய்ச்சல் நோயாளிகளுக்கு மலேரியா நோய் இருக்கிறதா என இரத்தப்பரிசோதனைக்கு கைவிரலில் இரத்தம் எடுக்கப்பட்டும், அவை சம்பந்தப்பட்ட இடத்துக்கு அனுப்பப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேபோல தீவுப்பகுதி, கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளிலும் மலேரியாநோய் பரவிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74,ப-11)

## புதிய அதிபர்களுக்கு கொழும்பில் இருநாள் பயிற்சி

மகரகம கல்வி நிர்வாகக் கல்லூரி - தேசிய கல்வி நிறுவகத்தினால் "புதிதாக அதிபர் தரம் பெற்றோரைத் திசை கோட்படுத்தும் கருத்தரங்கு" ஒன்று இம் மாதம் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் கொழும்பு இந்துக்கல்லூரியில் நடாத்தப்படவுள்ளது

கல்வி அமைச்சினதும் கல்விச் சேவைகள் அமைச்சினதும் ஒத்துழைப்புடன் தேசியக் கல்வி நிறுவகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் அண்மையில் அதிபர் தரப் பதவிகள் பெற்ற ஆசிரியைகளைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

இக்கருத்தரங்கில் பாடசாலை நிருவாகச் செயன்முறைகள், பாடசாலை நிதி முகாமைத்துவச் செயன்முறைகள், கல்வி நிருவாக ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு, பயனுறுதியுடைய பாடசாலை சமுதாயத் தொடர்புகளை ஒழுங்கமைத்தல், பாடசாலைக் கலைத்திட்டமுகாமைத்துவத்திலும் மேற்பார்வையிலும் அபிவிருத்தி சார்ந்த நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு நிறுவனமாகப் பாடசாலைச் செயன்முறையை முகாமை செய்தல், பாடசாலை நிருவாகம், முகாமைத்துவம் என்பன தொடர்பான பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடலும் வழிகாட்டலும் என்னும் விடயங்கள் இடம் பெறவுள்ளன.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்வோருக்கு 200 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுவதோடு கடமை லீவு, கடமைப் புகையிரத ஆணைச்சீட்டு முதலானவையும் வழங்கப்படவுள்ளன. (12 32)

## பல நோ. கூ. சங்கங்களுக்கு மக்கள் வங்கி கடன் உதவி

நிதிக் கஷ்டத்திற்குள்ளாகியிருக்கும் யாழ் குடாவிலுள்ள பலநோ. கூ. சங்கங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய மக்கள் வங்கி கடன் வழங்கவுள்ளது.

சந்தைப்படுத்தல் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஆரம்பக்கட்டமாக 700 மெற்றிக் தொன் உழுந்தைக் கொள்வனவு செய்ய இவ் வங்கி கொடுப்பனவு செய்யும்.

அண்மையில் யாழ் மாவட்ட தேசியக் கூட்டுறவு சபையில் இடம்பெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் மக்கள் வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது. (66)

## சுன்னாகம் மக்கள் வங்கியில் இன்றும் நாளையும் நிவாரணம்

சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளையில் 1000 ரூபா, 4000 ரூபா நிவாரணத்தை இதுவரை எடுக்காதவர்களுக்கு இன்றும் நாளையும் பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இன்று 16 ஆம் திகதி சனிக்கிழமை: உரும்பராய், ஈப்பிளான், சுன்னாகம், புன்னாலைக் கட்டுவன், ஏழாலை.

நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாவடி, உடுவில், சங்குவேலி, இணுவில், சந்தரோடை.

கொடுப்பனவுகளுக்குரியவர்கள் அடையாள அட்டை, கிராம சேவகரின் கொடுப்பனவு அட்டை, தேசிய அடையாள அட்டை, 2 ரூபா முத்திரை என்பவற்றுடன் காலை 9 மணிக்கு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது (ப-11)

### இந்திய ராணுவத்தால்

## சேதப்படுத்தப்பட்ட ப.நோ.கூ.ச மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன

இந்திய ராணுவ நடவடிக்கைகள் காரணமாக குடாநாட்டில் உள்ள பல. நோ கூ. சங்கங்களின் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய மதிப்பீடுகள் கணிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ஒவ்வொரு சங்கங்களுக்கும் வழங்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுத் தொகைபற்றியும் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு உதவி ஆணையாளர் தெரிவித்தார்,

சங்கங்கள் கட்டிடங்கள் மறு சீரமைப்பு செய்வது சம்பந்தமான உறுதிப்பத்திரங்களை உடனடியாகச் சமர்ப்பித்தால் உரிய நஷ்ட ஈட்டுப் பணத்தை விரைவாகப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (66)

### வசதி...

20 ஆசிரியர்கள் இவ் இலவச வகுப்புகளில் கல்விபோதித்து வருகின்றனர்.

தினமும் 3 மணிதொடக்கம் 6 மணி வரை நடைபெற்று வரும் இவ் இலவச வகுப்புகளில் 1-ஆம் ஆண்டு தொடக்கம் க. பொ. த. சாதாரண தரம் வரையான மாணவர்கள் கல்வியைப் பெற்றுவருகின்றனர். (15)

### எரிபொருள்...

பெற்றோல் கூட்டுத்தாபனத்திடம் இருந்தும் பொருள்களைப் பெற அனுமதி பெற்றுள்ளனர். (66)

### மூலாதாரப்...

அண்மையில் புதியநியமனம் பெற்ற பெண் ஒருவர் இரண்டு பாடசாலைகளுக்கு நியமனம் பெற்றதுடன் கொதிதண்ணி அதிபராகவும் நியமனம் பெற்றார்

கொழும்பில் கல்விராஜாங்க அமைச்சரின் சிபார்சுக்கு அமையவே மேற்படி புதிய நியமனம் வழங்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

### சிறு...

தொழில், கைத்தறி, உண்ணும் பொருள்கள் பைக்கற்றில் அடைத்தல், சருப்பட்டி இனிப்புவகை தயாரித்தல் போன்ற பலவகையான தொழில்களுக்கும் இவ் உதவி வழங்கப்படவுள்ளது.

### விண்ணப்ப முடிவு ஏப்பிரல் 5

## திறந்த பல்கலைக்கழகத்தில் பத்திரிகைக்கலை பாடநெறி

யாழ் பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தினால் பத்திரிகைக்கலை பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆங்கில மொழி மூலமான இப் பாடநெறி ஒரு வருடகாலத்திற்கு நடைபெறும் எனவும் இதைப் பூர்த்தி செய்பவர்கள் பத்திரிகைத் துறையில் டிப்ளோமா பாடநெறியைத் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலம் திறமைச் சித்தியுடன் பத்திரிகைத் துறையில் இரண்டு வருட அனுபவம் உடையவராகவோ அல்லது பத்திரிகைத் துறையில் மூன்று வருட அனுபவம் உடையவராகவோ இருப்பவர் எவரும் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும் எனத் திறந்த பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இப்பாடநெறிக்கான விண்ணப்பங்களை ஏப்பிரல் 5-ம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு புதிய முறையில் நேர்முகப்பரீட்சை

தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை புதுமுறையில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேர்முகப் பரீட்சை நடாத்தும் குழு நேரடியாக அப் பாடசாலைகளுக்குச் சென்று இதனை நடாத்தவுள்ளனர்.

மே மாத ஆரம்பத்தில் இது மேற்கொள்ளப்படுமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (70)

## கொழும்பு செல்ல முடியாதவர்கள் மீண்டும் வீடு திரும்பினார்கள்

கொழும்பு செல்வதற்காக இவ்வார ஆரம்பத்தில் சென்றவர்கள் தமது பயணத்தை இடையில் கைவிட்டு நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினர்

வவுனியாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் இவர்கள் கொழும்பு செல்ல முடியாது ஓமந்தைப் பாடசாலையில் தங்கி இருந்து நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

மேலும் சிலர் ஓமந்தைப் பகுதியில் நிலைமையைப் பார்த்து தங்கி இருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேபோல சில வாகனங்களும் வவுனியாவுக்குள் செல்ல முடியாது ஓமந்தைப் பகுதியில் தரித்து நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது. (70,33,ப-11)

## மதிய உணவு முத்திரைக்கு பொருள்கள் பெற முடியாத நிலை

குடாநாட்டில் உள்ள பாடசாலைகளினால் வழங்கப்பட்ட மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகளுக்குரிய பொருள்களைப் பெறுவதில் மாணவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ள கூட்டுறவுக் கிளை நிலையங்களின் பெயர் குறித்து இவ் அட்டை வழங்கப்பட்டதனால் பல மைல்களுக்கு அப்பால் இருந்து உயர் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் பாடசாலை முடிவடைந்த பின்னரே காவல் நின்று பொருள்களைப் பெற வேண்டியுள்ளது,

குறிப்பாக யாழ்நகர்ப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கே இக் கஷ்டநிலை உருவாகியுள்ளது.

பல நோ. கூ. சங்கங்கள் சேவைமனப் பான்மையுடன் பொருள்களை நேரடியாகப் பாடசாலைகளில் வைத்தே விநியோகம் செய்ய வேண்டுமென பெற்றோர்கள் விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

### இராணுவ...

ஸ்ரீலங்கா அரசுக்கு நெருக்குதல் அளிக்க வேண்டும் என தமிழர் விடுதலை கூட்டணி மாவை சேனாதிராஜா கேட்

## விடுதலைப் புலிகள் வெளிவருகிறது

இந்தியத் தலையீடு எனும் ஆசிரியத் தலையங்கத்துடன் விடுதலைப் புலிகள் குரல் 21-இல் வெளிவருகிறது.

இதில் இந்திய ராணுவச் சிறைஉடைப்புச் சம்பந்தமான செய்தியும், குடும்பமாக வெளிநாடு சென்றவர்களின் சொத்துகளை கையேற்கிறோம் இது சுவீகரிப்பு அல்ல என்ற விளக்கக் கட்டுரையுடன் வெளிவருகின்றது. (71)

## அசாம் ஆளுநர் ராஜினாமா

அசாம் மாநில ஆளுநர் தாகூர் திடீரென தேற

சாதாரண தரம் வரையான மாணவர்கள் கல்வியைப் பெற்றுவருகின்றனர். (15)

திடம் இருந்தும் பொருள்களைப் பெற அனுமதி பெற்றுள்ளார். (66)

# காலமானார்

## திரு. ர. சேனாதிராஜா

திருநெல்வேலி குமாரசாமி வீதியைச் சேர்ந்த (சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட) திரு. ரட்ணசிங்கம் சேனாதிராஜா இளைப்பாறிய பிரதான எழுதுவினைஞர் A. G. A. காரியாலயம் யாழ்ப்பாணம்) அவர்கள் 15 03 91 இல் காலமானார் அன்னார் திருமதி. இராசம்மாவின் அன்புக் கணவரும் திருமதி நாகேஸ்வரி கல்பகே (அவுஸ்திரேலியா), திருமதி சிவசோதி சத்தியமூர்த்தி, சசிதரன் (கனடா) ஸ்ரீ நாகேஸ்வரா (கனடா), ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16 03 91 இன்று சனிக்கிழமை திருநெல்வேலி குமாரசாமி வீதியில் உள்ள 34-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று காலை 10-00 மணி அளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி சே. இராசம்மா
(மனைவி)

இல. 34, குமாரசாமி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

03080

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 16-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ளும் பொருள்கள் பைக்கற்றில் அடைத்தல், சருப்பட்டி இனிப்பு வகை தயாரித்தல் போன்ற பலவகையான தொழில்களுக்கும் இவ் உதவி வழங்கப்படவுள்ளது.

தலைமைச் செயலகத்தில் இருந்து இதற்கான விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்ததும் இக்கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (66)

### தமிழக...

ருந்தால் நாடாளுமன்றத்தில் இதுதொடர்பான பிரேரணை வரும் போது காங்கிரஸ் எதிர்த்து வாக்களித்திருக்கலாம் அல்லது வெளிநடப்புச் செய்திருக்கலாமே எனவும் கருணாநிதி சுட்டிக்காட்டினார்

இதனிடையே அ.தி.மு.கவுக்கும் காங்கிரசுக்கும் இடையில் எந்த விதமான கூட்டுமுறிவும் இல்லை என ராஜீவ் காந்தி கூறியுள்ளார். ஜெயலலிதாவுடனான கட்சிக்கூட்டில் பழைய உறவே தொடர்கிறது எனக்குறிப்பிட்ட ராஜீவ், இரு கட்சிகளிடையிலான தொகுதி உடன்பாடு சட்டப்பேரவைக்கே பொருந்தும் என ஜெயலலிதா அறிவித்தபோதிலும் இது தொடர்பாக நான் அவருடன் பேச இருக்கிறேன்." என்றும் தெரிவித்தார்.

ளுக்கு அப்பால் இருந்து உயர் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள்பாடசாலை முடிவடைந்த பின்னரே காவல் நிலை பொருள்களை

### கற்கோவளத்தில்...

(சபாபதி) (23) என்பவரின தும் வ. தம்பிராசா (வேதன்) (32) என்பவர்களது சடலங்களே என அடையாளம் காட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல்களின் போது திரு சூரி என்பவர் தப்பி நீந்திக்கரைசேர்ந்ததும் குறிப்பிடத்தக்கது. (15)

### அகதிகள்...

ஒன்றுக்கு 4 பைக்கற்றும், மூன்று தொடக்கம் நான்கு அங்கத்தவர்களுக்கு 3 பைக்கற்றும், இரண்டு அங்கத்தவர்களுக்கு 2பைக்கற்றும் ஒருவருக்கு 1பைக்கற்றும் பால்மா வழங்கப்படும் என செயற்திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார். (66)

### இரு...

வருகின்றது.

இதேவேளை இவ்விநியோகம் முடிந்த பின்னர் ஏழாவது கட்டத்தில் இருந்து வழமைபோல ஏனைய விநியோகங்கள் தடையின்றி நடைபெறும் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (66)

### இராணுவ...

ஸ்ரீலங்கா அரசுக்கு நெருக்குதல் அளிக்க வேண்டும் என தமிழர் விடுதலை கூட்டணி மாணவ சேனாதிராஜா கேட்டுள்ளார்.

சென்னை சென்றுள்ள அவர் தற்போது தமிழகத்தில் சீரான அரசியல் நிலை இல்லாததை வாய்ப்பாக கொண்டு ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

### 6 ஆம்...

மன்னன் எல்லாளனுடைய வரலாற்றை ஒரு வசனத்தில் கூறும் இந்நூல், இதில்குறைந்த காலம் கொடுங்கோல் ஆட்சி செய்த சிங்கள அரசர்கள் பற்றி எழுதியுள்ளது.

தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உண்மையான (திராவிட) தொடர்புகள் முற்றாக மறைக்கப்பட்டு, வட இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்ததான ஒரு கற்பனைத் தொடர்புக்கே அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

இது தொடர்பான ஒரு விரிவான அறிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் த. மகாசிவம் கல்வி அமைச்சர், ராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## அஸாம் ஆளுநர் ராஜினாமா

அஸாம் மாநில ஆளுநர் தாகூர் திடீரென நேற்று இராஜினாமா செய்துள்ளார் காரணம் எதுவும் கூறப்படவில்லை. அஸாமில் உல்பா தீவிரவாதிகள் நடமாட்டம் அதிகரித்து விட்டதாக கூறி அந்த ஜனாதிபதி ஆட்சி கொண்டு வரப்பட்டு, ஆளுநருக்கும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படிருந்தன.

### புலிபாய்ந்த...

வரே இச் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர். இவர்கள் மீது புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர் மிதி வெடியில் சிக்கிய இரு ஜெய்பாய்கள் காலிழந்தனர் (71)

### தாண்டிக்குளத்தில்...

குதலை தொடர்ந்து தாண்டிக்குள ராணுவத்தினர் சாஸ்திரிக் கூளான் குளம் நோக்கி பல தடவை ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். (71)

### சிலாவத்துறை...

முதல் ஒரு மணி நேரமாக தாக்குதல் நடாத்தப்பட்டது எட்டுக்குண்டுகள் வீசப்பட்டன. வீடு ஒன்று சேதமானது இதனைத் தொடர்ந்து ஹெலி ஒன்றும் பரவலாக தாக்குதல் நடத்தியது. (71)